பக்கங்கள் 18

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 14 புதன்கிழமை 01.11.2023 அதிர்வு 93

## திவுலப்பிட்டிப் பகுதியில் போராட்டத்தால் பதற்றம்

### பிக்கு உட்பட அறுவர் கைது

கொழும்பு – திவுலப்பிட்டி பிரதான வீதி இன்று முற்றாகத் தடைப்பட்டது.

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து மின்சார நுகர்வோர்

04

## தினேஷ் ஷாப்டர் படுகொலை; உறுதிப்படுத்தியது நீதிமன்றம்

### சந்தேகநபர்களை உடன் கைது செய்யுமாறு உத்தரவு



இலங்கையின் பிரபல வர்த்தகர் தினேஷ் ஷாப்டர் கழுத்து மற்றும் முகத்தில் அழுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது.

04

## நவம்பர் 13இல் சபையில் 'பட்ஜட்'

### டிசம்பர் 13இல் வாக்கெடுப்பு



- சுடர் திலீபன் -

2024ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் (ஒதுக்கீட்டுச் சட்டமூலம்) எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு கூடிய போதே இது தொடர்பில் இணக்கம் காணப்பட்டது என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

04

## பிரதமர் தலைமையில் வவுனியாவில் கூட்டம்



- கே.வசந்தரூபன் -

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் தலைமையில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது வனஇலாகாவிடம் இருந்து காணி விடுவிப்பு மற்றும் நிலப் பயன்பாடு, மாவட்ட கல்வி நிலை, பிறப்பு பதிவு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன், நாடாளுமன்ற உறுப்பினர்களான

04

## இலங்கை வந்த நிர்மலாவை வரவேற்ற இ.தொ.காவினர்!



இலங்கைக்கு இன்று வந்த இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வரவேற்றனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட

04

## யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று புருசோத்தமனின் நினைவேந்தல்

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் செல்லத்துரை புருசோத்தமனின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

(விரிவான செய்தி 16ஆம் பக்கத்தில்)



## யாழில் கசிப்புடன் இளம் பெண் கைது!



- எஸ்.நிதர்ஷன் -


யாழ்ப்பாணத்தில் கசிப்புடன் இளம் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் கசிப்பு வியாபாரம் நடைபெறுகின்றது

04

# எரிபொருளின் விலைகள் மாறினாலும் பேருந்துக் கட்டணத்தில் மாற்றம் இல்லை!

## இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு




எரிபொருளின் விலையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் பேருந்துக் கட்டணத்தில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகத்துக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதேவேளை, தற்போது பேருந்துக் கட்டணத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட மாட்டாது. எதிர்காலத்தில் டீசலின் விலை மேலும் அதிகரிக்கப்பட்டால் நிச்சயமாக பேருந்து கட்டணத்திலும் மாற்றங்கள் கொண்டு வரப்படும் என்று அந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள்களின் விலைகளில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

இதன்படி, ஓட்டோ டீசல் லீட்டர் ஒன்றின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 356 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உணவுப் பற்றாக்குறை தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை!

## கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

விவசாய அமைச்சரதும் விவசாயிகளதும் ஒத்துழைப்போடு அரிசியில் தன்னிறைவை எட்டி மேலதிக அரிசி உற்பத்தியைப் பேண முடிந்துள்ளது. எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்று அச்சம் கொள்ளத் தேவையில்லை.

கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டீ. பி. ஹேரத் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (31) நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இந்த நாட்டுக்குத் தேவையான 40 வீதமான பால் இதுவரை உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த நிலையில் அதனை இரட்டிப்பாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் என்ற வகையில், உணவு உற்பத்தி செயல்முறையை நெருக்கடியின்றி பராமரிக்க தேவையான பங்களிப்பை வழங்கி வருகிறது. எதிர்காலத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க அதிக கவனம் செலுத்தப்பட்டது.

கால்நடை அமைச்சும் மக்களுக்கு தேவையான அளவு புரதத்தை வழங்கக் கூடிய வேலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்தியுள்ளது.

கடந்த காலத்தில், 40 வீதமான திரவப் பால் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது. இந்நிலையைக் கருத்தில் கொண்டு திரவப் பால் உற்பத்தியை இரட்டிப்பாக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

மேய்ச்சல் தரைகளை மேம்படுத்தவும் ஊட்டச்சத்து நிலையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்குத் தேவையான உணவைத் தட்டுப்பாடின்றி வழங்குவதன் மூலம் திரவப் பால் உற்பத்தியை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

தேசிய பால் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, பால்மாவில் தங்கியிருக்கும் நிலையை மாற்றி அதற்குப் பதிலாக மாற்று முறைகளைப் பயன்படுத்த வேண்டும்.

மக்கள் மத்தியில் திரவப் பாலை ஊக்குவிக்க வேண்டும். திரவப் பாலை மக்கள் இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் வகையில், நடமாடும் விற்பனை நிலையங்களைப் பயன்படுத்துவதிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதேவேளை திரவப் பாலை பொதி செய்து விற்பனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது கால்நடை தீவனம் இறக்குமதி செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மூடப்பட்ட கால்நடை உற்பத்தியை மீண்டும் தொடங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.– என்றார்.

# ஸ்ரீ லங்கன் விமான சேவையை மறுசீரமைக்க முதற்கட்ட நடவடிக்கை

ஸ்ரீ லங்கன் விமான சேவையை மறுசீரமைப்பதற்கு விலைமனுக் கோரப்பட்டுள்ளது.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அறிக்கை ஒன்றை வெளியிட்டு இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கன் விமான நிறுவனமானது 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகையைக் கொண்டிருப்பதாக மேலும் அவர் சுட்டிகாட்டினார்.

அதற்கமைவாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அச்சு ஊடகங்கள் மற்றும் இணையத்தளங்களைப் பயன்படுத்தி இந்த கேள்வி அறிவித்தல் அழைப்புப் பத்திரங்கள் வெளியிடப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.



# வடக்கு மக்களின் வாழ்வை மேம்படுத்த உலக வங்கி பூரண ஆதரவு வழங்கும்

## அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் வடக்கு ஆளுநரிடம் தெரிவிப்பு



இலங்கையின் அபிவிருத்திக்குக் கைகொடுப்போம் என்று உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இதன்படி, எதிர்காலத்தில் வடமாகாண மக்களின் வாழ்க்கையை மேலும் மேம்படுத்த உலக வங்கி பூரண ஆதரவை வழங்கும்.

உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் இவ்வாறு உறுதியளித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கடந்த திங்கட்கிழமை (30) உலகவங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் அன்னா பிஜெர்டே மற்றும் அவரது குழுவையும் பெண்கள், சிறுவர்கள் துறை சார்ந்த தலைவர்களையும் சந்தித்திருந்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் அவர்கள் வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் உலக வங்கியின் பிரதிநிதிகளுக்குத் தெரியப்படுத்தினார்.

வடமாகாணத்தில் எவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளலாம் என்பதைக் கண்டறிவதில் பெரும் சவால்களை எதிர்கொள்வதாகவும், இதன்போது தெரிவித்தார்.

கல்வி, சுயதொழில் உட்கட்டமைப்பு மற்றும் சிறுவர், பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதில் வடக்கு மாகாணத்துக்கு ஆதரவளிக்குமாறும் உலக வங்கி பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டார்.

இவற்றைக் கேட்டறிந்த உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர், இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக நிலைமை தொடர்பில் தாம் மிகவும் கவனத்தில் கொள்வதாகவும் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பான திட்டங்களுக்கு தாம் கைகொடுப்பதாகவும் கூறினார்.

வடமாகாணத்தின் கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு உலக வங்கி பூரண அனுசரணையை வழங்கும் எனவும் உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் இந்தக் கலந்துரையாடலில் தெரிவித்தார்.

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் வெட்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில்!

இனந்தெரியாத கும்பல் ஒன்று நடத்திய கொடூர தாக்குதலால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்கள் வெட்டுக் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மேல் கரகஹமுன பிரதேசத்தில் நேற்று (31) இரண்டு ஓட்டோக்களிலும் சிறிய லொறி ஒன்றிலும் வந்த கும்பல் ஒன்றே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது.

வீட்டில் இருந்த இருவர் மீது கூரிய ஆயுதங்கள் மற்றும் தடிகளால் தாக்கியுள்ளனர். இது தொடர்பில் கடவத்தை பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காயமடைந்த இருவரும் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலால் 25 மற்றும் 29 வயதுடைய இரண்டு சகோதரர்களே காயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கடவத்தை



பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இருவரைக் கைது செய்துள்ளனர். ஏனைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## திவுலப்பிட்டிப் பகுதியில்...

சங்கம் திவுலப்பிட்டி பகுதியில் இன்று முன்னெடுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக வீதி தடைச் செய்யப்பட்டது என்று போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது மின்சார நுகர்வோர் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க மற்றும் பௌத்த பிக்கு உட்பட 6 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பேரணியின் ஆரம்பத்தில், பேரணியை நடத்தக் கூடாது எனப் பொலிஸார் அறிவித்திருந்தனர்.

இதன்போது, கலவரமாக நடந்து கொண்ட மின்சார நுகர்வோர் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க உள்ளிட்ட குழுவினரைப் பொலிஸார் கைது செய்தனர். இதன்போது அங்கு பதற்றம் நிலவியது.

கைதானவர்கள் திவுலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## தினேஷ் ஷாப்டர்...

இதன்மூலம் குற்றச் செயல் இடம்பெற்றுள்ளது என்று தீர்ப்பளித்த நீதிமன்றம், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக

நபர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டார்.

மரண விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் மற்றும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய நிபுணர் குழுவின் அறிக்கைகள் என்பனவற்றைப பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதிவான் திருமதி ரஜீந்திர ஜயசூரிய இந்தத் தீர்ப்பை அறிவித்தார்.

## யாழில் கசிப்புடன்...

எனப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அந்த வீட்டுக்குச் சென்று சோதனை நடத்திய போது 5 லீற்றர் கசிப்பைப் பொலிஸார் மீட்டனர்.

இதன்போது கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் வீட்டில் இருந்த 27 வயதான பெண்ணைப் பொலிஸார் கைது செய்தனர்.

## இலங்கை வந்த...

உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.காவின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இ.தொ.காவின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் உள்ளிட்டோர் இதன்போது பங்கேற்றிருந்தனர். அத்துடன் வெளிவிவகார இராஜாங்க அமைச்சரும் கலந்துகொண்டிருந்தார்.

மலையக மக்களுக்கு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'நாம் 200' நிகழ்வு நாளை கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெறவுள்ளது. அமைச்சர் ஜீவன் தொண்டமானின் அழைப்பையேற்று இந்நிகழ்வில் இந்திய அரசின் பிரதிநிதியாகவே இந்திய நிதி அமைச்சர் பங்கேற்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நவம்பர் 13இல்...

"எதிர்வரும் நவம்பர் 13 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால், 2024 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை இரண்டாம் மதிப்பீடு எனப்படும் 'வரவு – செலவுத் திட்ட உரை' நாடாளுமன்றத்துக்கு முன்வைக்கப்படவுள்ளது.

அதன்பின்னர், நவம்பர் 14 முதல் 21 வரை ஞாயிறு தினங்கள் தவிர்ந்து 7 நாட்கள் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் (வரவு – செலவுத் திட்ட) இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.

அத்துடன், வரவு – செலவுத்திட்ட இரண்டாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு நவம்பர் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 6.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதையடுத்து, குழுநிலை விவாதம் நவம்பர் 22 ஆம் திகதி புதன்கிழமை முதல் டிசம்பர் 13 ஆம் திகதி புதன்கிழமை வரை ஞாயிறு தினங்கள் தவிர்ந்து 19 நாட்கள் இடம்பெறவுள்ளது.

அதற்கமைய, 2024 நியதியாண்டுக்கான வரவு – செலவுத்திட்ட மூன்றாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 13 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 6.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வரவு–செலவுத்திட்டவிவாதத்தின்போது ஒவ்வொரு நாளும் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 6.00 மணி வரை விவாதம் இடம்பெறவுள்ளதுடன், வாக்கெடுப்பு இடம்பெறும் நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப. 6.00 மணி முதல் பி.ப. 6.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் இடம்பெறும்." – என்றார்.

## பிரதமர் தலைமையில்...

செல்வம் அடைக்கலநாதன், எஸ்.விநோநோகராதலிங்கம், சார்ள்ஸ் நிர்மலநாதன், வடக்கு மாகாண ஆளுநர் பி.எச்.எம். சார்ள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வவுனியா மாவட்ட அரச அதிபர் சரத் சந்திர மற்றும் அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.









# இலங்கையின் பொருளாதார நிலை ஆரம்ப அறிகுறிகளை எட்டியுள்ளது

## ஜனாதிபதி ரணில் நேற்றுத் தெரிவிப்பு

இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை ஆரம்ப அறிகுறிகளை எட்டியுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பொருளாதார மீட்சி மற்றும் ஸ்திரத்தன்மையின் குறிப்பிடத் தக்க முன்னேற்றத்தைக் குறிக்கும் வகையில், நெருக்கடியில் இருந்து மீள்வது தொடர்பான இரண்டாவது உயர் மட்ட வட்டமேசை கலந்துரையாடல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நேற்று (31) கொழும்பில் நடைபெற்றது.



சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம், பலதரப்பு முதலீட்டு உத்தரவாத நிறுவனம், ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம், ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிறுவனம், ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள் சபை, தனியார் மேம்பாட்டு துறை என்பன இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டன.

2022 டிசெம்பரில் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த உயர்மட்ட வட்டமேசைக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

பொருளாதார மற்றும் கட்டமைப்பு தொடர்பான முக்கிய பிரச்சினைகளை மையமாகக் கொண்டு அரசால் முன்னெடுக்கப்படும் மறுசீரமைப்புத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆராயும் நோக்கத்துடன் இது கூட்டப்பட்டது.

இதன்போது ஜனாதிபதி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

நெருக்கடி நிலையில் இருந்து நிலையான வளர்ச்சிப் பாதைக்குப் பிரவேசித்தல், முதலீடுகளை ஈர்த்தல், தனியார் மூலதனத்தை ஈடுபடுத்துதல், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் அரசும் இதில் பங்கேற்கேற்கும் தரப்பினரும் இலங்கைக்குத் தாக்குப்பிடிக்கக் கூடியதும் அனைத்தையும் உள்ளடக்கியதுமான பசுமை அபிவிருத்திக்குத் தேவையான அர்ப்பணிப்பைப் பேணுதல் என்பன தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதானால் பல் தரப்பு நிதி நிறுவனங்களின் உதவியுடன் ஒருங்கிணைந்த உதவித் திட்டம் அவசியம் என்று 2022 டிசெம்பரில் நடைபெற்ற அமர்வில், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள் முடிவு செய்தனர்.

இதுவரை, இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மைக்கான ஆரம்ப அறிகுறிகளைக் காட்டியுள்ளது. பணவீக்கத்தைக் குறைத்தல், அந்நியச் செலாவணி பணப் புழக்க அழுத்தங்களைத் தளர்த்துதல் மற்றும் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு மூலோபாயத் திட்டத்தை அங்கீகரித்தல் உள்ளிட்ட கடன் மறுசீரமைப்புச் செயல்பாட்டில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இலங்கை அரசின் மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி உதவியுடனும் ஏனைய அபிவிருத்தி பங்காளிகளின் ஆதரவுடன், அடிப்படை சட்டங்கள் இயற்றப்பட்டு, ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கவும், சர்வதேச நிதிச் சந்தைக்குள் மீண்டும் பிரவேசிக்கவும் கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இருப்பினும், வரையறுக்கப்பட்ட நிதி மூலங்கள் மற்றும் வெளிப்புற இடையூறுகள் காரணமாக, இந்த மீட்சிக்கான பாதை இன்னும் விரிவுபடுத்தப்படவில்லை.

முன்னோக்கிச் செல்கையில் நிரந்த அபிவிருத்திப் பாதை ஒன்றை மீளப் பெறுவதற்காக, விரைவான மற்றும் போதுமான ஆழமான வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு மற்றும் பொருளாதார நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கும், போட்டித் தன்மையை மேம்படுத்துவதற்கும், ஏழை மற்றும் பாதிக்கப்படக் கூடிய மக்களைப் பாதுகாப்பதற்கும் நுண் பொருளாதார மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்களை தொடர்ந்து செயல்படுத்துதல் ஆகியவை நிலையான வளர்ச்சிப் பாதையை மீண்டும் பெறுவதற்கு அவசியம்.

அபிவிருத்திப் பங்காளிகள் உட்பட தொடர்புடைய பங்குதாரர்களை உள்ளடக்கி இந்தச் சீர்திருத்தங்களை ஒருங்கிணைக்க தெளிவான மற்றும் சுருக்கமான செயல் திட்டம் இருப்பது அவசியம். அரசால் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சீர்திருத்தத் திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அவர்கள் வழங்குவார்கள்.–என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ‘நாரா’ போட்ட நாமம்

நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாகச் சீரழிந்ததற்குக் காரணம் லஞ்சம், ஊழல், மோசடி, சூறையாடல், தவறான நிர்வாகம் போன்றவைதான். நாட்டின் வளத்தைப் பயனுள்ள வகையில் பயன்படுத்தாமல் சீரழிந்து போக விட்டதும் இதற்குள் அடங்கும்.

அத்தகைய ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ. நாடு வருடாந்தம் பல்லாயிரம் கோடி ரூபா அந்நிய செலாவணியை இழந்தமை பற்றிய ஒரு விடயத்தை அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

நாட்டின் சமுத்திரங்கள் தொடர்பான நீர் வாழ் வளங்களின் ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் முகாமைத்துவத்தை அல்லது மேலாண்மையைக் கையாளும் அதிகாரத்துடன் அமைக்கப்பட்டது தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (யேசுய) ஆகும்.

நாட்டின் கடல் வளத்தைச் சரியாக முகாமத்துவம் செய்து, நாட்டுக்கு உரிய வருமானத்தை ஈட்டச் செய்யும் விடயத்தில் இந்த அமைப்புத் தனது பொறுப்பைப் புறக்கணித்துச் செயற்பட்டமை மட்டுமல்லாமல், வெளிப்புறத் தரப்புகள் தங்களின் நலனுக்காக இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நாட்டின் வளத்தை சூறையாடிச் செல்வதற்கும் அனுமதித்து, அதற்கு உடந்தையாகவும் இருந்தது என்று நீதி அமைச்சர் குற்றம் சாட்டுகிறார்.

‘நாரா’ நிறுவனம் வெளிதரப்புகளுடன் உடன்பாடுகளை எட்டி, பெறப்பட்ட கொடுப்பனவுகளை அந்த நிறுவனமே பயன்படுத்திக் கொண்டது என்று நீதிய மைச்சர் விசனம் தெரிவிக்கின்றார்.

கடல் வாழ்வுக்கான பாதுகாப்பு தொடர்பான சர்வதேச பட்டய ஒழுங்குமுறைகளை வேண்டும் என்றே நடைமுறைப்படுத்தாமல் தவிர்த்திருக்கிறார்கள் என்பது நீதி அமைச்சரின் கருத்து.

இலங்கையின் கடற்பரப்புக்குள் ஒரு நாளைக்கு 200 முதல் 300 கடற்கலங்கள், கப்பல்கள் பிரவேசிகின்றன. இவற்றின் நகர்வுகளுக்கு நீருக்கு அடியிலும் நீர் மட்டத்திலும் வெளிப்புறத்திலும் உள்ள நிலைமைகள் பற்றிய வரைபடங்கள் அத்தியாவசியமானவை. நீருக்கடியில் உள்ள கூம்புகள், பாறைக் குவியல்கள், நீரோட்டங்கள், மாற்றமடையும் நிலப் படுக்கையின் தோற்றங்கள் போன்ற இன்னோரன்ன விடயங்களைக் கண்டறியும் ‘ஹைட்ரோகிராபிக்’ வரைபடங்கள் மிக முக்கியமானவை.

இலங்கைக்குள் நுழையும் கடற்கலங்களுக்கு இத்தகைய வரைபட வசதிகளை வழங்குவதற்கு ஒரு கப்பலுக்கு வெறும் 25 டொலர் கட்டணத்தை அறவிட்டிருந்தால் கூட, வருடாந்தம் 20 கோடி டொலரை (சுமார் 6 ஆயிரத்து 500 கோடி ரூபாவை) திரட்டு நிதிக்குப் பெற்றிருக்க முடியும் என்று விவரித்துள்ளார் நீதி அமைச்சர்.

இத்தகைய கட்டண முறையை ‘நாரா’ அமைப்பு தனித்துச் சுருட்டி கொள்ள முயல்வதாகக் குற்றம் சுமத்தும் அவர், தேசிய ‘ஹைட்ரோகிராபிக்’ சட்டம் கொண்டுவரப்பட்டு, அந்த வளத்தின் முழுப் பயனும் வருமானமும் நாட்டுக்குக் கிடைக்க வழி செய்யப்படும் என்று கூறி இருக்கிறார்.

இப்படி எத்தனை துறைகளில் வளம் வீணாகிக் கொண்டிருக்கின்றதோ...!






## கவிதை நூல் வெளியீடு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

டாக்டர் ஜலீலா முஸம்மில் எழுதிய “தூரிகை வரையும் மின்மினிகள்” ஹைக்கூ கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை (28) மாலை ஏறாவூர் வாவிக்கரை வீதியில் அமைந்துள்ள கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

ஏறாவூர் கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி எம்.ஐ.எம்.எம். மஹ்பூழ் தலைமையில் நடைபெற்ற இந்த நூல் வெளியீட்டு விழாவில், ஏறாவூர் பிரதேச செயலாளர் நிஹாரா மௌஜூத் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதன் போது நூலாசிரியர் டாக்டர் ஜலீலா முஸம்மில் தனது தாயார் ஹாஜியானி சித்தி பௌசியா ஹயாத்து முஹம்மதுவிடம் நூலின் முதற் பிரதியைக் கையளித்தார்.

## கிழக்கில் 486 புதிய அதிபர்களுக்கு நியமன கடிதம் வழங்கும் திகதி மாற்றம்

(வி.ரி. சகாதேவராஜா)

இலங்கை அதிபர் சேவை தரம் 3 இற்கு நியமனம் பெற்ற கிழக்கு மாகாணத்தை சேர்ந்த 486 புதிய அதிபர்களுக்கான நியமன கடிதங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் அறிவித்துள்ளார்.

இந்த நிகழ்வு எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை திருகோணமலை இந்துக் கலாச்சார மண்டபத்தில் நடைபெற இருந்தது.

தவிர்க்க முடியாத காரணத்தால் இந்த நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை அதே இடத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே புதிய அதிபர்கள் 6 ஆம் திகதி காலை 7 மணிக்கு மண்டபத்திற்குள் வந்து சேருமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஜி.திசாநாயக்கா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்து கொண்டு நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கவுள்ளார்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

“நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்.”

-வாரன் பஃவெற் (அமெரிக்கத் தொழிலதிபர்)



# வன்னிவிளாங்குளம் துயிலும் இல்லத்தில் அஞ்சலியுடன் சிரமதானப் பணி ஆரம்பம்!

(எஸ். தவசீலன்)

வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு சிரமதான பணிகள் ஆரம்பமாகின.

தமிழ் மக்களுக்கான உரிமைப் போரில் தமது உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை போற்றி வணங்கும் மாவீரர் நாள் இவ்வாண்டும் கார்த்திகை 27 ஆம் திகதி தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களும் தயாராகி வருகின்றன.

முல்லைத்தீவு வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் செய்வதற்கான சிரமதான பணிகள் வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவால் இன்று (01) ஆரம்பிக்கப்பட்டது.

முன்னதாக மாவீரர் களுக்கு ஈகைச் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்தி மலர்வணக்கம் இடம்பெற்றதை தொடர்ந்து சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாண்டும் கார்த்திகை 27 மாவீரர் நாள் உணர்வு பூர்வமாக இடம்பெறும் எனவும் அனைத்து மாவீரர் பெற்றோர் உறவுகளையும் கலந்து கொள்ளுமாறும் முன்னாயத்த பணிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குமாறும் பணிக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.















# சம்பள உயர்வு கோரி நாடு முழுவதும் சுகாதார பணியாளர் பணிப்பகிஷ்கரிப்பு!

## முல்லைத்தீவு வைத்தியசாலையில்

**(எஸ். தவசீலன்)**

சம்பள உயர்வு உட்பட ஒன்பது கோரிக்கைகளை வலியுறுத்தி இன்றையதினம் (01) முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை சுகாதார பணியாளர்கள் பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளனர்.

நாட்டிலுள்ள அனைத்து மருத்துவ மனைகளில் சுகாதார ஊழியர்கள் இன்று தங்கள் கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க போராட்டம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் பணியாற்றும் சுகாதார ஊழியர்களும் காலை ஏழு மணி தொடக்கம் 12 மணிவரை தொழிற்சங்க போராட்ட நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

முல்லைதீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வெலிஓயா, ஒட்டுசுட்டான், மல்லாவி, மாங்குளம் உள்ளிட்ட பகுதிகளில் மக்களுக்குச் சேவையாற்றிவரும் அரச மருத்துவ மனைகளில் பணியாற்றும் சிற்றூழியர்கள் அனைவரும் பணி புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளார்கள்.

சுகாதார ஊழியர்கள் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

சுகாதார ஊழியர்களுக்காக 5 நாள் வேலைத் திட்டத்தை வழங்கல். (வாரத்துக்கு 40 மணித்தியாலங்கள்), மத்திய அரசின் மற்றும் மாகாண சுகாதார நிறுவனங்களில் அனைத்து ஊழியர்களிற்காக மேலதிக நேர கொடுப்பனவு, விடுமுறை தின சம்பள வரையறையை நீக்குதல், மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பாக ரேட் முறையை வழங்குதல் (இதுவரையிலும் வைத்தியர், தாதியர், இடை நிலை வைத்தியர் மற்றும் துணை வைத்தியர் சேவைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.), தற்போது வழங்கப்படும் ஆயிரம் ரூபா விசேட கொடுப்பனவை 7 ஆயிரம் ரூபாவரை அதிகரித்துக் கொள்வது. சீருடை கொடுப்பனவைப் 15 ஆயிரம் ரூபாவரை அதிகரித்துக் கொள்வது.

முறையான இடமாற்ற முறையொன்று மற்றும் இடமாற்றம் விரைவாக வழங்குதல், ஓய்வூதிய சம்பளத்தை உறுதிப்படுத்துதல், ஊழியர் பற்றாக்குறையின் போது ஆட்சேர்ப்பு செய்தல் - அனைத்துப் பதவி உயர்வுகள் வழங்குவது தொடர்பாக முன் நடவடிக்கைகள் எடுத்தல், மருந்துகள் மற்றும் உபகரணங்கள் பற்றாக்குறையை விரைவாக நிவர்த்தி செய்வதல் மற்றும் சத்திர சிகிச்சைகள் வழமைப் போல் நடத்துதல், நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதற்காக 20 ஆயிரம் ரூபாவால் சம்பளத்தை அதிகரித்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்த பணி புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.





## கிளிநொச்சி வைத்தியசாலையில்

கிளிநொச்சி வைத்தியசாலையிலும் சுகாதார ஊழியர்கள் இன்று சம்பள உயர்வு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

சம்பளம் 2016 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிகரிக்கப்படாத நிலையில் அது தொடர்பிலும் மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்தும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில்




சுகாதார ஊழியர்கள் இன்று சம்பள உயர்வு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை முன்பாகவும் மேற்கொண்டனர்.

காலை 7 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை சுகாதார சேவை தொழிற் சங்க கூட்டணியாக போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

## மஸ்கெலியா வைத்தியசாலையில்



**(மஸ்கெலியா நிருபர்)**

மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலை ஊழியர்களும் இன்று தங்களது பல கோரிக்கை முன் வைத்து பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுக்கொள்ள வந்த நோயாளர்கள் சிரமத்துக்கு ஆளாகினர்.

# காரைநகர் - யாழ்ப்பாணம் பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்!

காரைநகரில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவை இன்று மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

காரைநகரில் இருந்து பயணத்தை தொடங்கி யாழ்ப்பாணம் சென்று மீண்டும் மதியம் 1.20 இற்கு யாழ்பாணத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்து காரைநகருக்கான சேவையை மேற்கொண்டது.

785 – 1 பேருந்து சேவையே இவ்வாறு இன்று ஆரம்பமானது.

கடந்த காலங்களில் காரைநகர் – யாழ்ப்பாணம் பேருந்து சேவையின் ஒரு பகுதியாகக் காரைநகர்– மூளாய் பிள்ளையார் கோவிலடி – டச்சு வீதி ஊடாக சித்தன்கேணி – யாழ்ப்பாணம் வீதி – வட்டுக்கோட்டை சந்தி – அராலி செட்டியார்மடம் ஊடாக யாழ்ப்பாணம் சென்ற பேருந்து முன்னர் ஏற்பட்ட கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாகச் சேவையை நிறுத்தியிருந்தது.

இதனால் மக்கள் பல சிரமங்களை எதிர்கொண்டனர்.

டச்சு வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்குச் சேதமடைந்து இருந்தமையும் இந்தப் பஸ் போக்குவரத்தத் தடைப்பட்டமைக்கு ஒரு காரணமாக இருந்தது.



கடந்த வாரம் டச்சு வீதி புனரமைக்கப்பட்ட நிலையில் பஸ் போக்குவரத்தை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக இலங்கை போக்குவரத்து சபையின் யாழ். பிராந்திய நிலையத்துடனும் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டது. இதன் பயனாக மீண்டும் இந்த பேருந்து சேவையை முன்னெடுக்க சாதகமான சமிஞ்சை கிடைத்தது.

இன்று முதல் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் பேருந்தின் நேர அட்டவணையை பின்பற்றி பயணிகள் பயன்பெற முடியும்.

பாடசாலை மாணவர்கள், வைத்திய சாலை செல்வோருக்கு இது மிகவும் பயனுடையதாக இருக்கும்.

மூளாய் டச்சு வீதி ஆரம்பம் முதல் சித்தன்கேணி டச்சு வீதி முடிவு வரையான வீதி பகுதியில் வாழும் மக்களின் போக்குவரத்து வசதியை இலகுபடுத்துவதே இந்தப் பேருந்து வழித்தடத்தின் பிரதான நோக்கமாகும்.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்.”
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VAN RENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882




# பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக கொழும்பில் அமைதி ஆர்ப்பாட்டம்

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக, சர்வதேச பௌத்த சம்மேளனம் ஏற்பாடு செய்த அமைதி ஆர்ப்பாட்டமொன்று "யுத்தம் வேண்டாம்" எனும் தொனிப் பொருளில், கொழும்பு-07 பௌத்தா லோக மாவத்தையில் நேற்று (31) செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் மஹா சங்கத்தினர்கள், பௌத்த, ஹிந்து, இஸ்லாம், கிறிஸ்தவர்கள் ஜாதி, மத வேறுபாடின்றி ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.




















# பெண்களிடம் வழிப்பறியில் ஈடுபட்டவர் பொலிஸாரால் கைது!

(எஸ். நிதர்ஷன்)

ஆலய வழிபாட்டுக்குச் செல்லும் பெண்களிடம் வழிப்பறியில் ஈடுபட்டு வந்த கொள்ளைக் கும்பலைச் சேர்ந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 10 தங்கப் பவுண் நகைகள், கைப்பைகள், தொலைபேசிகள் மற்றும் வழிப்பறிக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் விரத வழிபாட்டுக்கு ஆலயம் செல்லும் பெண்களை இலக்கு வைத்து வழிப்பறியில் ஈடுபட்டவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த 28 வயதுடையவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் தெ.மேனன் தலைமையிலான பொலிஸாரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

## பதிவாளர் திணைக்களத்தின்

# நிகழ்நிலை சேவைகளை யாழில் பெறமுடியாத நிலை!




நாடளாவிய ரீதியில் பதிவாளர் திணைக்களத்தின் நிகழ் நிலை சேவைகளுக்கு ஊடாக காணிப் பதிவு, உறுதி, புத்தகப் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. இந்த நிலையில் யாழ். மாவட்ட காணிப் பதிவகத்தின் ஊடாக நிகழ்நிலை சேவைகளைப் பெற முடியாத நிலைமை உள்ளது. இங்கு நிகழ்நிலை சேவைகளைப் பெற முடியாது என்று மாவட்டக் காணிப் பதிவு அலுவலகம் தெரிவித்துள்ளது.

பதிவாளர் திணைக்களத்தின் இணையத் தளத்தின் ஊடாகத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பலருக்கு நீண்ட காலமாகப் பதிலேதும் கிடைக்காத நிலை உள்ளது.

இது தொடர்பில் பதிவாளர் நாயக அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு வினவிய போது, நாடளாவிய ரீதியில் – நாட்டிலுள்ள சகல காணிப் பதிவகங்களின் ஊடாகவும் நிகழ்நிலை சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். நிகழ் நிலையில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் அந்தந்தக் காணிப் பதிவகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் உள்ள காணிப் பதிவகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் தொலைபேசி இலக்கமும் வழங்கப்பட்டுள்ளது.

பதிவாளர் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு வினவிய போது, யாழ்ப்பாணத்தில் அத்தகைய சேவைகள் எதையும் நிகழ்நிலை ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியாது. தேவையாயின் நேரில் வாருங்கள் என்று காணிப் பதிவகத்தின் பிரதம எழுதுவினைஞர் தெரிவித்துள்ளார்.

நேரத்தையும், மனித வலுவையும் மாதப்படுத்தும் வகையில் அரசு பல வழிகளில் நிகழ்நிலையூடாக இலகுபடுத்தல்களை ஆரம்பித்துள்ள போதிலும், அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் தொழில்நுட்ட அனுகூலங்களை அனுபவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் பதிவாளர் நாயகத்துக்கு முறைப்பாடுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



# கல்முனை மாநகர சபையின் 'பட்ஜெட்'டுக்கு முன்மொழிவு!

## ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டது

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்துக்கு மருதமுனை பிரதேசத்தை மையப்படுத்தி, அபிவிருத்திக்கான மனாரியன்ஸ் நண்பர்கள் அமைப்பு பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளது.

அமைப்பின் தலைவர் எம்.ஐ.எம். வலீத் தலைமையில் செயலாளர் ஐ.எல். றுஸ்துல் பாரி, பொருளாளர் ஏ.எஸ். எம். முஜீப் ஆகியோர் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மியை இன்று சந்தித்து இதனைக் கையளித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச். ஜௌஸி ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது குறித்த முன்மொழிவுகளை மாநகர சபையின் பட்ஜெட்டில் உள்வாங்கி, நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தப்பட்டது.

மருதமுனை மக்கள் மண்டபத்தை புரைமைப்புச் செய்து மக்கள் பாவனைக்கு வழங்க வேண்டும், மருதமுனை கடற்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவை பாவனைக்கு உகந்ததாக புனரமைப்புச் செய்தல், அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் இருந்து வரும் மக்களின் பிரசித்தி பெற்ற பொழுது போக்கிடமாக காணப்படும் மருதமுனை கடற்கரைப் பிரதேசத்தில் பொருத்தமான இடங்களில் பொது மலசல கூட வசதி, வகன தரிப்பிட வசதி என்பனவற்றை ஏற்படுத்தல்.

மருதமுனை பொது நூலகத்திற்கு தேவையான தளபாடங்கள் உள்ளிட்ட உள்ளக வசதிகளை மேம்படுத்தல், மருதமுனை வடக்கு பிரதேசமான பெரியநீலாவணை உள்ளடங்கலான நீர்வடிகாலமைப்பு வசதிகளை ஏற்படுத்தல், மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் கடின பந்து கிரிக்கெட் விளையாடக் கூடியதாக பாதுகாப்பு வலை வசதி ஏற்படுத்திக் கொடுத்தல், மருதமுனை அல்மனார் அருகாமையில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் வெளிச்ச வசதிகளை ஏற்படுத்தல், இம்மைதானத்தை அண்டியதாக உள்ள பாதையினை மக்கள் பாவனைக்கு உகந்ததாக புனரமைத்தல், மருதமுனை மேற்குப் பிரதேசத்தில் புதிதாக குடியேறியுள்ள மக்களின் நலன் கருதி நூலகம் மற்றும் விளையாட்டு மைதானம் என்பவற்றை அமைத்தல், மருதமுனை மேற்குப் பிரதேசத்தில் புதிதாக அமையப்பெற்றுள்ள பிரான்ஸ் சிற்றி வீட்டுத்திட்ட முகப்பு பகுதியில் சிறுவர் பூங்கா அமைத்தல் உள்ளிட்ட விடயங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

# இறந்து ஒதுங்கும் மீன்கள்!

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – முந்தல் சிறுகடலில் கடந்த சில நாள்களாக மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருகின்றன. இதனால் நூற்றுக்கு மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

முந்தல், கொத்தாந்தீவு, கட்டைகாகாடு, வட்டவான், பூனைப்பிட்டி, ஆண்டிமுனை உள்ளிட்ட சிறு கடலை உள்ளடக்கிய பல பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீன்கள் இறந்து கரை ஒதுங்கி வருகின்றது.

கிளாத்தி, செத்தல், மன்னா, திலாப்பியா மற்றும் விரால் உள்ளிட்ட பல வகையான மீன்களே இவ்வாறு இறந்த நிலையில் கரையொதுங்குவதாக மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



இவ்வாறு, மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்குவது தொடர்பில் புத்தளம் மாவட்ட நீரியல் வளத்துறை அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் ஆர். எம்.பி.கே.ரணதுங்கவிடம் கேட்ட போது, கடந்த காலங்களில் முந்தல் சிறுகடலில் நீரில் உப்பின் தன்மை குறைவடைந்துள்ளமையே மீன்கள் இறப்பதற்கான காரணம் எனத் தெரிவித்தார்.

சிறுகடலில் இறந்துள்ள மீன்கள் சிலவற்றை பரிசோதனைக்காக நாரா நிறுவனத்துக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும் அவர் மேலும் கூறினார்.

# கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் திடீர் விபத்து விழிப்புணர்வு!

(அ.அஸ்வர்)

கிளிநொச்சி வைத்தியசாலையில் திடீர் விபத்து தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று (31) செயன்முறை ரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்டது.




வைத்தியசாலைகளை எப்பொழுதும் தயார் நிலையில் வைத்திருப்பதன் அவசியத்தை எடுத்துக்கூறும் வகையில் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது இரணைமடு சந்தியிலிருந்து கிளிநொச்சி வைத்தியசாலை வரை நோயாளர்களை பல வாகனங்களிலும் வைத்தியசாலைக்கு கொண்டுவருவது போல் சித்திகரிக்கப்பட்டு திடீர் விபத்து தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு செயன்முறையாக முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இராணுவத்தினர், பொலிஸார், கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர், மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர், வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் என பல்வேறு தரப்பினரும் திடீர் விபத்து ஏற்படும் போது தமது பங்களிப்பை செயன்முறை ரீதியாக வெளிப்படுத்தினர்.





# மாணவர்கள் கௌரவிப்பு

(எம்.எப்.எம்.நவாஸ்)

2022 ஆம் ஆண்டு தரம் 5 புலமை பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களுக்கு கௌரவிப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை (29) கல்வி அபிவிருத்தி மன்றத்தால் சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு உறுப்பினரும் முன்னாள் பிரதேச செயலாளருமான ஏ.எல்.எம். சலீம் கலந்து கொண்டு சித்தி அடைந்த மாணவர்களுக்குப் பரிசில்களும் சான்றுகளும் வழங்கினார்.










# கலை, இலக்கியவாதிகளுக்குச் செயலமர்வு

(எம். எப். நவாஸ்)

திருக்கோவில் பிராந்திய கலை, இலக்கியவாதிகளின் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கில் , கிழக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்த 'எழுகை' செயலமர்வு அண்மையில் காஞ்சிரங்குடா கால்நடை வைத்திய சுகாதார சேவைகள் திணைக்கள பயிற்சி மண்டபத்தில் நடைபெற்றது .

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் ச.நவநீதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வை, சிரேஷ்ட கலாசார அலுவலர் வி .குணபாலா நெறிப்படுத்தினார்.




# கைதடியில் முத்தமிழ் விழா!

(த.சுபேசன்)

தென்மராட்சி – கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியமும் குமரநகர் சனசமூக நிலையமும் இணைந்து முத்தமிழ் விழாவை நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைதடி குமரநகர் சன சமூக நிலைய நகுலன் கலையரங்கில் நடத்தின.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் செல்வரத்தினம் மயூரனும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கைதடி பிரதேசத்தில் வாழும் மூத்த பிரஜைகளும், சிறுவர்களும் விருந்தினர்களால் சிறப்பு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த முத்தமிழ் விழாவில் மாணவர்கள் மற்றும் உள்ளூர் கலைஞர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

# மட்டக்களப்பு கோட்டையை பார்வையிட்ட மாணவர்கள்



(பழுவூரான்)

குருநாகல் மாவட்ட பொல்பிட்டிகம மகாநாம தேசிய பாடசாலை மாணவர் கள் மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட் டைக்கு நேற்று முன் தினம் திங்கட் கிழமை (30) சென்று பார்வையிட்டுள்ள னர்.

இதன் போது கருத்து தெரிவித்த இப்பாடசாலை மாணவர்கள், 400 வருடங் கள் பழமைவாய்ந்த ஒல்லாந் தர் களால் கட்டப்பட்ட இக் கோட்டையானது இன்றுவரை சிதைவடையாது பேணிப் பாதுகாக்கப்படுவதுடன், கோட்டையானது கம்பிரமாக காணப்படுவதைக் கண்டு ஆச்சரியம் அடைவதாகப் பெருமித மடைந்தனர்.

இதன் போது 100 இற்கும் அதிகமான மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.







# படுகொலை செய்யப்பட்ட புருசோத்தமனின் நினைவேந்தல் இன்று யாழ். பல்கலையில்

(பிரபாகரன் டிலக்சன்)

படுகொலை செய்யப்பட்ட யாழ்ப் பாணப் பல்கலைகழக கலைப்பீட மாண வர் ஒன்றிய முன்னாள் தலைவர் புரு சோத்தமனின் 15 ஆம் ஆண்டு நினை வேந்தல் இன்றைய தினம் அனுஷ் டிக்கப்பட்டது.

2006 - 2007 காலப் பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவராக இருந்த செல்லத்துரை புருசோத்தமன் கடந்த 2008.11.01 ஆம் திகதி சுட்டுப் படு கொலை செய்யப்பட்டார்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட புருசோத்தமனின் நினைவு தினம் இன்றைய தினம் யாழ்ப்பாணப் பல் கலைக்கழக சுற்றுவட்டத்தில் அனுஷ் டிக்கப்பட்டது.

இதன்போது மாணவர்கள் சுடரேற்றி மலர் அஞ்சலி செலுத்தினர்.





# வெள்ள அனர்த்தம் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல்!



முல்லைத்தீவு மாவட்டத்தில் வட கிழக்கு பருவப் பெயர்ச்சி மழையை எதிர்கொள்வது தொடர்பான முன்னா யத்த கலந்துரையாடல் இன்று (01) முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் எஸ்.கோகுலராஜா வெள்ளப்பெருக்கு, சூறாவளி, டெங்கு முதலான அனர்த்தங்களை எவ்வாறு தடுப்பது என்பது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி னார்.

இதன்போது வடகிழக்கு பருவப் பெயர்ச்சி மழையால் உண்டாகும் அனர்த்தங்களை எதிர்கொள்ளும் முறைகள் மற்றும் அனர்த்தங்களைக் குறைப்பதற்கான திட்டமிடல்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறையினரு டன் ஆராயப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால் ஏற்படும் பாதிப்புக்களை கட்டுப்படுத்த மேற் கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடுகள் குறித்தும் விரிவாக கலந்துரையா டப்பட்டது.

கமநல அபிவிருத்தி திணைக்களத் தின் கீழ் உள்ள குளங்கள் உடைப்பெடுக் கும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பாகவும் மாவட்டத்தில் உள்ள பாரிய குளங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதனைவிட அனர்த்தங்களின் போது மக்களை பாதுகாப்பதற்கு மேற் கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய முன்னாயத்த நடவடிக்கைகள், வீதிப் போக்குவரத்து மற்றும் வீதி விபத்து, பாடசாலை மற்றும் வைத்திய சாலைகளில் அனர்த்த குறைப்பு செயற் றிட்டம் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

# இந்தியாவின் உள்நாட்டு வர்த்தகம் மூன்று மடங்கால் அதிகரித்துள்ளது!

## - பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்



இந்தியாவின் உள்நாட்டு வர்த்தகம் கடந்த 9 ஆண்டுகளில் 3 மடங்கு அதிகரித்துள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்திய நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட 3 வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடியும் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவும் இணைந்து காணொளிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தனர். அகெளரா - அகர்தலா எல்லை தாண்டிய ரயில் இணைப்பு, குல்னா - மோங்லா துறைமுக ரயில் பாதை, மைத்ரீ சூப்பர் அனல்மின் நிலையத்தின் அலகு - 3 ஆகிய மூன்று திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டன.

இந்த திட்டங்களை தொடங்கிவைத்த பின்னர் பேசிய பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, இந்தியா - பங்களாதேஷ் இடையேயான நட்பின் பிணைப்பை வலுப்படுத்தும் நோக்கில் மூன்று திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதற்காக நான் இந்திய அரசுக்கும் மக்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன் என்று குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, இந்திய - பங்களாதேஷ் ஒத்துழைப்புக்கு கிடைத்துள்ள மற்றுமொரு வெற்றியைக் கொண்டாடும் தருணம் இது. இரு நாடுகளுக்கு இடையேயான உறவு புதிய உச்சங்களை தொடர்ந்து அடைந்த வண்ணம் உள்ளது. இந்தியாவும் பங்களாதேஷும் இணைந்து கடந்த 9 ஆண்டுகளில் மேற்கொண்ட பணிகள், அதற்கு முந்தைய 10 ஆண்டுகளில்கூட நடந்தது கிடையாது.

பல பத்தாண்டுகளாக நிறைவேறாத எல்லை மறு சீரமைப்பு ஒப்பந்தம் இந்த 9 ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கிறது. அமைதி, பாதுகாப்பு, நிலைத்தன்மை ஆகியவற்றுக்கு இது வித்திட்டுள்ளது. கடல் எல்லை பிரச்சினையையும் நாம் தீர்த்திருக்கிறோம்.

கடந்த 9 ஆண்டுகளில், பங்களாதேஷ் தலைநகர் டாக்காவையும், இந்தியாவின் ஷில்லாங், அகர்தலா, கவுகாத்தி, கொல்கத்தா ஆகிய நகரங்களையும் இணைக்கும் நோக்கில் 3 பேருந்து சேவைகள் தொடங்கப்பட்டன. கடந்த 2020 இல் இருந்து இரு நாடுகளுக்கு இடையே சரக்கு ரயில் போக்குவரத்தும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்கும் இடையே உலகின் மிகப்பெரிய கப்பலான கங்கா விலாஸ் கப்பலைத் தொடங்கியதன் மூலம், சுற்றுலா மேம்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆண்டுகளில் நமது உள்நாட்டு வர்த்தகம் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. இன்று தொடங்கப்பட்டுள்ள அகெளரா - அகர்தலா ரயில் இணைப்பு வரலாற்றுச் சிறப்பு மிக்க தருணம். பங்களாதே/க்கும் இந்தியாவின் வட கிழக்குக்கும் இடையேயான முதல் ரயில் இணைப்பு இது. விடுதலைப் போராட்டக் காலத்தில் இருந்து பங்களாதேஷுடன் திரிபுரா நெருக்கமான உறவைக் கொண்டிருக்கிறது. இதேபோல், மைத்ரீ சூப்பர் அனல்மின் நிலையத்தின் 2வது அலகு தொடங்கப்பட்டதில் நான் மிகவும் மகிழ்கிறேன்.

அனைவரோடும் இணைந்து அனைவருக்குமான வளர்ச்சி எனும் இந்திய அரசின் அணுகுமுறை அண்டை நாடான பங்களாதேஷுக்கும் பொருந்தும். பங்களாதேஷ் வளர்ச்சியின் மிகப் பெரிய பங்குதாரராக இந்தியா இருப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்.

கடந்த 9 ஆண்டுகளில் இந்தியா பங்களாதேஷுக்கு 10 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை அளித்திருக்கிறது. சாதனைப்பட்டியல் மிக நீண்டது. 3 திட்டங்கள் தற்போது தொடங்கப்பட்டுள்ளன. கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற் றிக்காக பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

---

# 5 மாநிலத் தேர்தல்களிலும் பா.ஜ.க. தோல்வியடையும்!

## - முதல்வர் ஸ்டாலின் கணிப்பு

ஐந்து மாநிலங்களுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த மாநிலங்களிலும் பா.ஜ.க. தோல்வியை தழுவப்போகிறது என்ற செய்திதான், நமக்கு தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னை திருவான்மியூரில், பூந்தமல்லி தி.மு.கவின் எம்.எல்.ஏ. கிருஷ்ணசாமி இல்லத் திருமணவிழா தமிழக முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று நடைபெற்றது.

இந்த திருமண விழாவில் பேசிய முதல்வர் ஸ்டாலின்,

பா.ஜ.கவின் மத்திய அரசு, தனக்கு எதிராக யார் எந்த கருத்தைக் கூறினாலும், அவர்களை மிரட்டுவது அச்சுறுத்துகிறது. அதற்காக, வருமான வரித்துறை, அமலாக்கத் துறையை பயன்படுத்துகின்றனர். இன்னும் சொல்ல வேண்டும் என்றால், தற்போது செல்போனை ஒட்டுக்கேட்கும் முறையைக் கையாண்டுள்ளனர்.

அவர்களைப் பொறுத்தவரை தோல்வி பயம் வந்துவிட்டது. இண்டியா கூட்டணி அவர்கள் எதிர்பாராத வகையில் அமைந்து, மக்களிடத்தில் மோடி ஆட்சியின் கொடுமைகள், அக்கிரமங்கள், அநியாயங்கள், அவலங்களை எடுத்துக் கூறி வருகிறோம். விரைவில் 5 மாநில தேர்தல் வரவிருக்கிறது.

5 மாநிலங்களிலும் பா.ஜ.க. தோல்வியை தழுவப்போகிறது என்ற செய்திதான், நமக்கு தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. அதனால், அவர்களுக்கு அச்சம் வந்துவிட்டது.



அந்த அச்சத்தின் காரணமாகத்தான் இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டு வருகிறன்றனர். இதையெல்லாம் முறியடித்து நாட்டுக்கு ஒரு நல்ல விமோசனத்தை ஏற்படுத்தி தருவதற்கு, இந்தியாவைக் காப்பற்றுவதற்கு, இண்டியா கூட்டணிக்கு வரும் மக்களவைத் தேர்தலில் மிக சிறப்பான வெற்றியைத் தேடித் தரவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# காசாவில் இன அழிப்பு: அதிகரிக்கும் கண்டனங்கள்



இஸ்ரேல் – ஹமாஸ் போர் தொடங்கி 26 நாட்கள் ஆகிவிட்டன. இந்த நிலையில் நேற்று காசாவின் ஜபாலியா அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஹமாஸின் முக்கிய தளபதி இப்ரஹிம் பியாரி கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் பாதுகாப்புப் படை உறுதி செய்துள்ளது.

இந்த நிலையில் காசாவில் இன அழிப்பு இடம்பெறுகின்றது எனவும் அதனைத் தடுக்க ஐ.நா. தவறிவிட்டது என்று கூறியும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தின் இயக்குநர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு முக்கிய மூளையாக செயல்பட்ட ஹமாஸ் மத்தியப் பிரிவு தளபதி இப்ரஹிம் பியாரியுடன் சேர்த்து அதிகள வான ஹமாஸ் அமைப்பினரும் கொல்லப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் பாதுகாப்புப் படை உறுதி செய்துள்ளது.

இந்த நிலையில், அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தெற்குப் பகுதிக்குச் செல்லவேண்டும் என சமூக வலைத்தளம் வாயிலாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஜபாலியா முகாம் மீதான தாக்குதல் குறித்து இஸ்ரேல் பாதுகாப்புப் படை செய்தித் தொடர்பாளர் லெஃப்டினண்ட் கர்னல் ஜொனாத்தன் கான்ரிக்கஸ் கூறுகையில்,

பியாரியை வீழ்த்தியது மிகவும் முக்கியமானது. அதேவேளையில் பக்கவாட்டு சேதாரமாக பொதுமக்களும் உயிரிழக்க நேர்கிறது. நேற்றைய தாக்குதலில் பியாரி உள்பட 50 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் பலர் தீவிரவாதிகள். பக்கவாட்டு சேதாரத்தை குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன என்று தெரிவித்துள்ளார்.

ஆனால் இப்ரஹிம் பியாரி வீழ்த்தப்படவில்லை என்று ஹமாஸ் தெரிவித்துள்ளது. இஸ்ரேல் போலித் தகவலைத் தெரிவிக்கின்றது. ஹமாஸ் அழிப்புப் போர்வையில் இஸ்ரேல் அப்பாவி பொதுமக்களை வீழ்த்துகிறது என்றும் ஹமாஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் இயக்குநர் கிரெய்க் மொக்கிபர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். ஒக்டோபர் 28 ஆம் திகதி தனது பதவி விலகல் கடிதத்தை அனுப்பிய அவர், காசாவில் இஸ்ரேல் நடத்தும் இன அழிப்பைத் தடுக்க ஐ.நா. தவறிவிட்டது. அங்கே அப்பாவி பாலஸ்தீனியர்கள் கொல்லப்படுகின்றனர். இந்தத் தாக்குதலை அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பாவின் பல நாடுகள் ஆதரித்து வருகின்றன.

மோசமான தாக்குதலை அவை இணைந்து அரங்கேற்றுகின்றன. அதைத் தடுக்க முடியாத ஐ.நா.வில் இருந்து நான் விலகுகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜபாலியா முகாம் மீதான தாக்குதலை ஈரான், எகிப்து, ஜோர்டான் போன்ற நாடுகள் கண்டித்துள்ளன. மனித உரிமை மீறல்களை இஸ்ரேல் செய்துவருகின்றது என்று அவை குற்றஞ்சாட்டியுள்ளன. காசாவில் லட்சக்கணக்கான அப்பாவிகள் வாடுகின்றனர். அவர்களுக்கு உரிய மனிதாபிமான உதவிகள் கிடைப்பதை யாவது இஸ்ரேல் உறுதி செய்ய வேண்டும் என்று அந்த நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

# காசாவில் மீண்டும் இணையத்தள சேவைகள் முற்றாக துண்டிக்கப்பட்டதால் மக்கள் அச்சம்

காசாவில் தகவல் தொலைத்தொடர்பு மற்றும் இணைய சேவைகள் முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளன என்று பாலஸ்தீன தொலைத்தொடர்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பினர் கடந்த மாதம் 7 ஆம் திகதி திடீரென தாக்குதல் நடத்தினர். அத்துடன் பலரை பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றனர். மாறி மாறி இரு தரப்பினரும் தாக்குதல் நடத்தி வருவதால், இரு பக்கமும் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது. இந்த போர் அதிக உயிரிழப்புகளையும், மனிதாபிமான நெருக்கடியையும் ஏற்படுத்தி வருகிறது.

இதனால் காசாவில் மனிதாபிமான அடிப்படையில் போரை நிறுத்த வலியுறுத்தி ஐ.நா. பொதுசபையில் தீர்மானம்



நிறைவேற்றப்பட்டது. ஆனால், இஸ்ரேல் போரை கைவிடுதாக இல்லை என திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

சில தினங்களுக்கு முன்பு இஸ்ரேல் காசாவில் இணையம் மற்றும் தொலைத் தொடர்புகளை முற்றாக துண்டித்தது. கிட்டத்தட்ட 20 லட்சம் மக்கள் பிறரை தொடர்பு கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டனர். அதன் பின்னர் மீண்டும் சேவை சீரானது.

இதுவரை வான்வழி தாக்குதலை நடத்தி வந்த இஸ்ரேல், தற்போது தரை வழித் தாக்குதலையும் தொடங்கியுள்ளது. இதனால் உயிரிழப்புகளும் அதிகரித்துள்ளன. இந்த நிலையில், பாலஸ்தீன தொலைத்தொடர்பு நிறுவனம் தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், காசாவில் தகவல் தொலைத்தொடர்பு மற்றும் இணைய சேவைகள் முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளன. இதை மக்களுக்கு அறிவிப்பதில் வருந்துகிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவது முறையாக மீண்டும் இணையதள சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளமையால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் மேலும் அச்சமடைந்துள்ளனர்.